# பொன்னேரி நகராட்சி

## திருவள்ளூர் மாவட்டம்

# நிர்வாக அறிக்கை
# 2022–23

# பொன்னேரி நகராட்சி

# நிர்வாக அறிக்கை
# 2022 - 2023

## அமைப்பும் நிர்வாகமும்

### ஆட்சி எல்லை:

அரண்ய நதியில் (ஆரணி ஆறு) சிராற்கள் விளையாட்டின் போது ஆற்றுமணலில் ஏர்கலப்பை (பொன்னாலான ஏறு) கிடைத்ததால் பொன் ஏரு என பெயர் பெற்று , தற்போது மருவி பொன்னேரி என அழைக்கப்படுகிறது. இவ்வூர் சிறப்பு மிக்க கோயில்கள் பலவற்றை கொண்டுள்ளது . பேரூராட்சிகளின் இயக்குநர் அவர்களின் செயல்முறை உத்திரவு ந.க.எண். 1953/82 , நாள் 24.02.1982–ன்படி தேர்வு நிலைப் பேரூராட்சியாகவும், அரசாணை எண் 116 நாள் 07.12.2021 ன்படி இரண்டாம் நிலை நகராட்சியாகவும் தரம் உயர்த்தப்பட்டது. நிர்வாக வசதிக்காக பேரூராட்சியின் 18 வார்டுகளின் எல்லைகள் தமிழ்நாடு வார்டு எல்லை மறுவரையறை ஆணைய வழிகாட்டுதலின்படி நகராட்சி பகுதி 27 வார்டுகளாக நிர்ணயம் செய்யப்பட்டது. இதன் விஸ்தீரணம் 8.04 சதுர கிலோ மீட்டராக உள்ளது.

### மக்கள் தொகை:

இந்நகராட்சி மக்கள் தொகை 2011ம் ஆண்டு மக்கள் தொகை கணக்கெடுப்பின் படி 31025. இதில் 15481 பேர் ஆண்கள், 15544 பேர் பெண்கள் ஆவர். தற்போதைய தோராய மக்கள் தொகை 36398.

### நகராட்சி அலுவலர்கள்:

### ஆணையர்:

01.04.2022 முதல் 14.10.2022 வரை நகராட்சியின் ஆணையராக திருமதி K.M. தனலட்சுமி பி.காம்., அவர்களும், அதனை தொடர்ந்து 15.10.2022 முதல் 21.11.2022 வரை திருவள்ளூர் நகராட்சி ஆணையர் திருமதி. G.ராஜலட்சுமி B.E., அவர்கள் ஆணையர் கூடுதல் பொறுப்பாக பணிபுரிந்தார். தற்போது திரு. S.கோபிநாத் B.Com., அவர்கள் 22.11.2022 முதல் ஆணையராக பணிபுரிந்து வருகிறார்.

### பொறியாளர்:

அறிக்கையாண்டில் 21.01.2022 முதல் திரு.ஏ.பி.குமார் என்பவர் பொன்னேரி நகராட்சி பொறியாளராக கூடுதல் பொறுப்பு வகித்து வருகிறார்.

## தேர்தல்:

தமிழ்நாடு மாநில தேர்தல் ஆணையத்தின் செய்தி வெளியீடு எண் 07/2021 நாள். 26.01.2022 ன்படி பொன்னேரி நகராட்சியில் வார்டு உறுப்பினர்களுக்கான நகர்ப்புற உள்ளாட்சி தேர்தல் 19.02.2022 அன்று நடைபெற்றதை தொடர்ந்து 22.02.2022 அன்று வாக்குகள் எண்ணப்பட்டு 1 முதல் 27 வார்டுகளுக்கான வார்டு உறுப்பினர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டனர்.

| வ.எண். | வார்டு | உறுப்பினர் பெயர் | கட்சி |
|---|---|---|---|
| 1 | வார்டு 1 | திருமதி வசந்தா செ | திமுக |
| 2 | வார்டு 2 | திரு செந்தில்குமார் எ ப | அ.திமுக |
| 3 | வார்டு 4 | திருமதி பரிதா ஜெ | திமுக |
| 4 | வார்டு 5 | திருமதி பத்மா க | சுயேட்சை |
| 5 | வார்டு 6 | திருமதி சாமுண்டிஸ்வரி | திமுக |
| 6 | வார்டு 7 | திருமதி சரஸ்வதி த | திமுக |
| 7 | வார்டு 8 | திருமதி மோகனா கெ | திமுக |
| 8 | வார்டு 9 | திருமதி அருணா சே | அ.திமுக |
| 9 | வார்டு 10 | திருமதி வேலா க | திமுக |
| 10 | வார்டு 11 | திரு யாக்கோபு து | திமுக |
| 11 | வார்டு 12 | திருமதி அஸரப்முன்னிசா ச | திமுக |
| 12 | வார்டு 13 | திருமதி மணிமேகலை வெ | அ.திமுக |
| 13 | வார்டு 14 | திரு நீலகண்டன் மு | திமுக |
| 14 | வார்டு 16 | திருமதி மணிமாலா சி | சுயேட்சை |
| 15 | வார்டு 17 | திரு இளங்கோ ஆ | திமுக |
| 16 | வார்டு 18 | திரு உமாபதி ரா | திமுக |
| 17 | வார்டு 19 | திரு நல்லசிவம் வி | திமுக |
| 18 | வார்டு 20 | திரு ராஜேஷ் ச | திமுக |
| 19 | வார்டு 21 | திருமதி தனுஷா கா | திமுக |
| 20 | வார்டு 22 | திரு சுரேஷ் பா | அ.திமுக |
| 21 | வார்டு 23 | திருமதி சரண்யா ஆ | அ.திமுக |
| 22 | வார்டு 24 | திருமதி அபிராமி வி | அ.திமுக |
| 23 | வார்டு 25 | திரு ஆனந்த் ச | அ.திமுக |
| 24 | வார்டு 26 | திருமதி கவிதா வி | சுயேட்சை |
| 25 | வார்டு 27 | திரு கோவிந்தராஜ் க | அ.திமுக |

மேலும் தேர்ந்தெடுக்கப்பட்ட வார்டு உறுப்பினர்களின் முதல் கூட்டம் மற்றும் பதவி ஏற்பு விழா 02.03.2022 நடத்தப்பட்டது. மேலும், நகராட்சி தலைவரை தேர்ந்தெடுப்பதற்கான மறைமுக தேர்தல் 04.03.2022 அன்று காலை 9.30 மணிக்கு நடத்தப்பட்டு, டாக்டர் திருமதி. K. பரிமளம் விஸ்வநாதன், MBBS., DGO., அவர்கள் நகரமன்ற தலைவராகவும் , துணைத் தலைவரை தேர்ந்தெடுப்பதற்கான மறைமுக தேர்தல் 04.03.2022 அன்று பிற்பகல் 2.30 மணிக்கு நடத்தப்பட்டு, **திரு. எஸ். ஏ. விஜயகுமார் , BBA, BL.,**அவர்கள் நகரமன்ற துணைத் தலைவராக தேர்ந்தெடுக்கப்பட்டனர்.

மேலும், தமிழ்நாடு மாநில தேர்தல் ஆணையத்தின் செய்தி வெளியீடு எண். 63/ 2022 நாள். 14.03.2022 ன்படி 31.03.2022 அன்று காலை 9.30 மணிக்கு வரிவிதிப்பு மேல் முறையீடு குழு உறுப்பினர்கள் பணி நியமனக் குழு உறுப்பினர் மற்றும் ஒப்பந்த குழு உறுப்பினர் தேர்ந்தெடுப்பதற்கான மறைமுகை தேர்தல் கூட்டம் நடத்தப்பட்டு கீழ்க்கண்டவாறு உறுப்பினர்கள் போட்டியின்றி தேர்வு செய்யப்பட்டுள்ளனர்.

1. **<u>வரி மேல் முறையீட்டு குழு உறுப்பினர்கள்.</u>**

1. திரு.ஆ. இளங்கோ , – 17 வது வார்டு
2. திரு . து. யாக்கோபு – 11 வது வார்டு
3. திரு. ச.ராஜேஷ் – 20 வது வார்டு
4. திருமதி.கா. தனுஜா – 21 வது வார்டு

2. **<u>ஒப்பந்த குழு உறுப்பினர்</u>**

1.திரு. வி. நல்லசிவம் வார்டு எண். – 19 வது வார்டு

3. **<u>பணி நியமன குழு உறுப்பினர்</u>**

1. திரு.எம். நீலகண்டன் வார்டு எண் – 14 வது வார்டு

மேற்படி தேர்ந்தெடுக்கப்பட்ட நகர்மன்றத்தின் முதல் கூட்டம் 31.03.3022 அன்று நடத்தப்பட்டு நகரமன்றம் செயல்பட்டு வருகிறது. மேற்படி நகர்மன்ற உறுப்பினர்களில் 7வது வார்டு உறுப்பினரான திருமதி.சரஸ்வதி என்பவர் உடல்நலக்குறைவு காரணமாக 07.06.2022 அன்று இயற்கை எய்தினார். அறிக்கையாண்டில் 11 சாதாரணக்கூட்டங்களும் 3 அவசரக்கூட்டங்களும் நடைபெற்றுள்ளது.

**நிர்வாகம்**

பொன்னேரி நகராட்சியின் தற்போதைய அலுவலக கட்டிடம் 2009 ம் ஆண்டு பேரூராட்சி காலத்தில் பகுதி II திட்டத்தின்கீழ் ராமச்சந்திரா தெருவில் ரூ. 20.00 இலட்சம் மதிப்பீட்டில் கட்டப்பட்டது . தற்போது பொன்னேரி நகராட்சியாக தரம் உயர்த்தப்பட்டதால் நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை மாண்புமிகு அமைச்சர் அவர்களின் அறிவிப்பு எண் 23ன்படி ரூ.100 இலட்சம் மதிப்பீட்டில் கூடுதல் கட்டிடம் கட்டும் பணி நடைபெற்று வருகிறது. மேலும், நகராட்சிகளின் நிலைகளுக்கேற்ப பணியிடங்களை தோற்றுவிப்பதற்கான வரையறைகள் நிர்ணயம் செய்து நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை அரசாணை எண் 10 நாள் 23.01.2023 ன்படி பொன்னேரி நகராட்சிக்கு கீழ்க்காணும் விவரப்படியான பணியிடங்கள் தோற்றுவிக்கப்பட்டுள்ளது.

**2022 –2023 அறிக்கையாண்டில் நகராட்சியில் அனுமதிக்கப்பட்டுள்ள பணியிடங்கள் விவரம்**

| வ. எண். | பிரிவு | பணியிடத்தின் பெயர் | பணியிடங்களின் எண்ணிக்கை |
|---|---|---|---|
| 1. | பொதுப்பிரிவு | மேலாளர் | 1 |
| 2. | | கணக்கர் | 1 |
| 3. | | வருவாய் ஆய்வாளர் | 1 |
| 4. | | உதவியாளர் | 1 |
| 5. | | இளநிலை உதவியாளர் | 5 |
| 6. | | தட்டச்சர் | 1 |
| 7. | | வருவாய் உதவியாளர்கள் | 3 |
| 8. | | பதிவறை எழுத்தர் | 1 |
| 9. | | அலுவலக உதவியாளர் | 3 |
| 10. | பொறியியல் பிரிவு | நகராட்சி பொறியாளர், | 1 |
| 11. | | பொதுப்பணி மேற்பார்வையாளர் | 1 |
| 12. | | பட வரைவாளர் | 1 |
| 13. | | பணி ஆய்வாளர் | 2 |
| 14. | | மின்பணியாளர் நிலை -II | 1 |
| 15. | | குழாய் பொருத்துநர், | 1 |
| 16. | நகரமைப்பு பிரிவு | நகரமைப்பு ஆய்வாளர் | 1 |
| 17. | பொதுசுகாதாரப் பிரிவு | துப்புரவு ஆய்வாளர் | 1 |
| 18. | | துப்புரவுப்பணி மேற்பார்வையாளர் | 4 |
| 19. | | களப்பணி உதவியாளர் | 1 |
| | | **மொத்தம்** | **31** |

மேற்படி அரசாணையில் குறிப்பிட்டுள்ள பணியிடங்களை தவிர்த்து பொன்னேரி நகராட்சியில் ( பேரூராட்சி பணியிடங்கள் ) கீழ்க்குறிப்பிட்ட பணியிடங்கள் உள்ளன.

| வ. எண். | பணியிடத்தின் பெயர் | பணியிடம் |
|---|---|---|
| 1. | குடிநீர் திட்டப்பணியாளர் | 5 |
| 2. | பம்பு அறை காவலர் | 1 |
| 3. | மேல்நிலை நீர்தேக்க தொட்டி இயக்குபவர் | 1 |
| 4. | தெருமின்விளக்கு மின்பணியாளர் | 1 |
| 5. | தெருமின்விளக்கு மின்பணி உதவியாளர் | 1 |
| 6. | துப்புரவு பணியாளர்கள் | 26 |
| 7 | ஓட்டுநர் | 1 |
| | **மொத்தம்** | **36** |

**கணினி மயமாக்கல் மற்றும் மின்னனு நிர்வாகம்**

இந்நகராட்சியில் சொத்துவரி, காலிமனைவரி, தொழில்வரி மற்றும் குடிநீர் கட்டணம் ஆகியவை கணினியில் கேட்பு பதியப்பட்டுள்ளது. மேலும், பிறப்பு இறப்பு பதிவுகளும் கணினியில் பதியப்பட்டு பொதுமக்களுக்கு சான்றுகள் வழங்கப்பட்டு வருகிறது. நகராட்சி அலுவலக வளாகத்தில் வரி வசூல் சேவை மையம் செயல்பட்டு வருகிறது. வரிவிதிப்புகளுக்கான தொகை மற்றும் இதர சேவைக்களுக்கான தொகைகள் பொதுமக்களால் செலுத்தப்பட்டு வருகிறது.

**பொறியியல் பணிகள்**

நகராட்சி பொறியியல் பிரிவு மூலம் 2022–23ம் அறிக்கையாண்டில் கீழ்கண்ட திட்டப்பணிகளுக்கு நிர்வாக அனுமதி வழங்கப்பட்டு பணிகள் நடைபெற்று வருகிறது .

| வ.எண் | திட்டத்தின் பெயர் | தொகை (ரூ. இலட்சம்) | தற்போதைய நிலை |
|---|---|---|---|
| 1 | **தமிழ் நாடு நகர்ப்புற சாலை மேம்பாட்டு திட்டம் 2022–23**<br>பாதாள சாக்கடை பணிகள் காரணமாக சேதமடைந்த சாலைகளை சீரமைத்தல் | 743.80 | பணி நடைபெற்று வருகிறது |
| 2 | **கலைஞர் நகர்ப்புற மேம்பாட்டு திட்டம் 2021–22**<br>1. பூங்கா மேம்பாடு<br>2.எரிவாயு தகனமேடை அமைத்தல் | 67.80<br>144.00 | 1. பணி முடிவுற்றது<br>2. பணி நடைபெற்று வருகிறது |
| 3 | **அம்ருத் 2.0 2021–22**<br>பூங்கா மேம்பாடு | 92.00 | பணி முடிவுற்றது |
| 4 | **நமக்கு நாமே திட்டம் 2021–22**<br>**குடிநீர் பணி** | 21.00 | பணி முடிவுற்றது |

| வ.எண் | திட்டத்தின் பெயர் | தொகை (ரூ. இலட்சம்) | தற்போதைய நிலை |
|---|---|---|---|
| 5 | **15வது நிதிக்குழு மானியம் 2021–22**<br>சாலைகள் சீரமைத்தல், குடிநீர் விநியோகம், திடக்கழிவு மேலாண்மை | **114.38** | **பணி முடிவுற்றது** |
| 6 | **சட்டமன்ற அறிவிப்புகள்**<br>கூடுதல் அலுவலகக்கட்டிடம் | **100.00** | **பணி நடைபெற்று வருகிறது** |
| 7 | **கலைஞர் நகர்ப்புற மேம்பாட்டு திட்டம் 2022–23**<br>பூங்கா மேம்பாடு | **33.00** | **பணி முடிவுற்றது** |
| 8 | **அம்ருத் 2.0 2022–23**<br>குளம் சீரமைத்தல் | **31.00** | **பணி முடிவுற்றது** |
| 9 | **தூய்மை இந்தியா திட்டம் 2.0**<br>**MCC, Bio Mining, MRF** | **269.00** | **பணி நடைபெற்று வருகிறது** |
| 10 | **பாதாள சாக்கடை திட்டம்** | **5478.00** | **பணி நடைபெற்று வருகிறது** |

**பொது நிதி பணிகள்**

| வ. எண் | பணிகளின் விவரம் | 2022–23 | |
|---|---|---|---|
| | | எடுக்கப் பட்டவை | மதிப்பீடு (ரூ.இலட்சத்தில்) |
| 1 | சாலைப்பணிகள் | 11 | 75.95 |
| 2 | குடிநீர் பணிகள் | 4 | 18.00 |
| 3 | தெரு விளக்கு பணிகள் | 1 | 7.10 |
| 4 | மழைநீர் வடிகால்வாய் பணிகள் | 1 | 4.50 |
| 5 | இதர பணிகள் | 10 | 46.80 |
| | **மொத்தம்** | **27** | **152.40** |

பொன்னேரி நகராட்சிப் பகுதிகளில், மத்திய/மாநில அரசுகள் நகராட்சி நிர்வாகத் துறை மற்றும் மாவட்ட ஆட்சியர் அவர்களால் அறிவிக்கக்பபடும் திட்டம் மற்றும் பொதுநிதி பணிகள் யாவும் அறிக்கையாண்டில் சிறப்பான முறையில் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

**பொது சுகாதாரம்**

இந்நகராட்சியில் நல அலுவலர் பணியிடம் ஏதும் அனுமதிக்கப்படவில்லை. துப்புரவு ஆய்வாளர் சுகாதார பிரிவின், பிரிவு அலுவலராக செயல்பட்டு வருகிறார். ஒரு துப்புரவு பணி மேற்பார்வையாளர், 24 நிரந்தர துப்புரவு பணியாளர் மற்றும் ஒப்பந்த அடிப்படையில் 68 தனியார் நிறுவன துப்புரவு பணியாளர்களை கொண்டு பொது சுகாதாரப்பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. பொதுமக்கள் அறியும் வண்ணம் சுகாதாரம் சம்மந்தமான தகவல்கள், தொடர்பு பணிகள் அவ்வப்போது மேற்கொள்ளப்பட்டு வருகிறது. அறிக்கையாண்டில் 2 பிறப்புகளும், 225 இறப்புகளும் பதிவு செய்யப்பட்டுள்ளது.

**<u>கொள்ளை நோய் விவரங்கள்</u>**

அறிக்கை ஆண்டில் கொள்ளை நோய் தொடர்பான விவர அறிக்கை

| வ.எண். | நோயின் பெயர் | பாதிக்கப்பட்டோரின் எண்ணிக்கை |
|---|---|---|
| 1 | காலரா | இல்லை |
| 2 | அம்மை | |
| 3 | பிளேக் | |
| 4 | சீதபேதி | |
| 5 | வயிற்றுக் கடுப்பு | |
| 6 | சுவாசப்பை சம்மந்தமான நோய் | |
| 7 | இன்ஃப்ளுன்சா மற்றும் நாய்கடி | |
| 8 | கொரோனா வைரஸ் ( COVID 19) | |

**<u>துப்புரவு பணிகள்</u>**

பொது சுகாதாரப் பிரிவு துப்புரவு பணியாளர்களால் நகரில் உள்ள குப்பைகள் தினசரி அகற்றப்பட்டு துப்புரவு செய்யப்பட்டது. இந்நகராட்சிப் பகுதியில், நகராட்சிக்கு சொந்தமான கட்டண கழிப்பறையில் குத்தகைதாரர்கள் மூலம் கட்டணம் வசூலிக்கப்படுகிறது. அறிக்கையாண்டில் 1 மினி லாரி , 1 மினி காம்பாக்டர், 1 டிராக்டர் , 30 மூன்று சக்கர தள்ளுவண்டிகள், 10 மூன்று சக்கர மிதிவண்டிகள், மற்றும் 2 பேட்டரி வாகனங்கள் துப்புரவு பணிக்காக பயன்படுத்தப்பட்டது. வார்டு எண்.1 முதல் 27 வரை உள்ள வார்டுகளில் கிரீன் சர்வீஸ் டிரஸ்ட் என்ற தனியார் நிறுவனம் மூலம் வீடு வீடாகச் சென்று குப்பை சேகரிக்கப்படுகிறது. மேலும், நகராட்சிக்குட்பட்ட அனைத்து வார்டுகளிலும் நகராட்சி துப்புரவு பணியாளர்களை கொண்டும் துப்புரவு பணி மேற்கொள்ளப்படுகிறது. பொன்னேரி நகராட்சியில் வீடு வீடாகச் சென்று சேகரிக்கப்படும் மக்கும் குப்பைகள், திடக்கழிவு மேலாண்மை வளமீட்பு பூங்காவிற்கு எடுத்து செல்லப்பட்டு , இயற்கை உரம் மற்றும் மண்புழு உரம் தயாரிக்கப்பட்டு வருகிறது.

**<u>உணவு கலப்பட தடுப்பு சட்டம்</u>**

2022–2023ம் ஆண்டு, உணவு பாதுகாப்பு சட்டம் அமுலில் உள்ளதால் மேற்படி பணிகள், உணவு பாதுகாப்பு துறையினரால் மேற்கொள்ளப்பட்டு வருகிறது,

**<u>வருவாய் பிரிவு வருவாயினம்</u>**

2022–2023 நிதியாண்டில், சொத்துவரி காலிமனை வரி, தொழில்வரி மற்றும் வரியில்லா இனங்கள் வசூலிக்கப்பட்ட விவரம் கீழ்கண்டுள்ளவாறு உள்ளது.

**சொத்து வரி:**

| கேட்பு தொகை | வசூல் | நிலுவை |
|---|---|---|
| 273.12 | 222.86 | 50.26 |

**காலிமனை வரி:**

| கேட்பு தொகை | வசூல் | நிலுவை |
|---|---|---|
| 4.05 | 4.05 | 0 |

**தொழில் வரி:**

| கேட்பு தொகை | வசூல் | நிலுவை |
|---|---|---|
| 20.94 | 20.94 | 0 |

**குடிநீர் கட்டணம்:**

| கேட்பு தொகை | வசூல் | நிலுவை |
|---|---|---|
| 127.96 | 54.42 | 73.55 |

**வரியில்லா இனங்கள்:**

இந்நகராட்சிக்கு வரியில்லா இனங்களில் பேருந்து நிலைய சுங்கம் வசூலிக்கும் உரிமம், சாலையோரக்கடைகளுக்கு சுங்கம் வசூலிக்கும் உரிமம், கட்டண கழிப்பிடம், வண்டிமேடு சுங்கம் வசூலிக்கும் உரிமம் என நான்கு குறுகிய கால குத்தகை இனங்கள் உள்ளன. மேற்படி இனங்களுக்கு ஏலம் விடப்பட்டுள்ளது. மேலும் நீண்ட கால குத்தகை இனத்தில் பொன்னேரி நகராட்சிக்கு சொந்தமான 5 வணிக வளாகங்களில் 72 எண்ணிக்கையிலான கடைகளும் உள்ளது.

**நகரமைப்பு**

இந்நகராட்சியில் நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை அரசாணை எண் 10 நாள் 23.01.2023 ன்படி ஒரு நகரமைப்பு ஆய்வர் பணியிடம் தோற்றுவிக்கப்பட்டதை தொடர்ந்து திருவள்ளூர் நகராட்சியின் நகரமைப்பு ஆய்வர் கூடுதல் பொறுப்பு வகிக்கிறார். நகர்மன்ற தீர்மானம் எண்.456 நாள் 26.02.2021ன் படி 01.04.2021 முதல் கட்டிட உரிமையாணை கட்டணம் உயர்த்தி வசூலிக்கப்பட்டு வருகிறது. இந்நகராட்சி பகுதியில் கட்டப்படும் கட்டுமானங்கள் முறையாக கட்டிட அங்கீகாரம் பெறப்பட்டு கட்டப்பட்டு வருகின்றன. கட்டிட அனுமதி பெறாமல் கட்டப்படும் கட்டுமானங்கள் உடனுக்குடன் கண்டறியப்பட்டு தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகளின் சட்டம் 1920–ன்கீழ் அறிவிப்பு வழங்கப்பட்டு அங்கீகாரம் பெற ஆவண செய்யப்படுகிறது.

அங்கீகாரம் பெறாமல் கட்டிடம் கட்டுபவர்கள் மீது சட்ட ரீதியாக நிர்வாக நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டது. அறிக்கையாண்டில் 105 எண்ணிக்கை கட்டிட விண்ணப்பங்கள் அனுமதி வழங்கப்பட்டுள்ளது. மேலும் இவ்வறிக்கையாண்டில் வரன்முறைபடுத்து திட்டத்தின் கீழ் 180 கட்டிட மனை வரன்முறை விண்ணப்பங்கள் பெறப்பட்டு வரன்முறைப்படுத்தப்பட்டுள்ளது.

இந் நகராட்சிக்கு சமுதாய அமைப்பாளர் பணியிடம் அனுமதிக்கப்படவில்லை . பொன்னேரி நகராட்சியில் 2017-18ஆம் ஆண்டிற்கு Deendayal Antyodaya Yojana National Urban Livelihoods Mission (DAY – NULM) திட்டத்தின் மூலம் பொன்னேரியில் இயங்கி வரும் அரசு மருத்துவமனையில் அனுமதிக்கப்படும் உள் நோயாளிகளின் உதவியாளர்கள் தங்குவதற்கு 50 எண்ணிக்கையில் படுக்கை வசதிகளுடன் கூடிய சிறப்பு தங்கும் விடுதி (Special Shelter) கட்டப்பட்டு பயன்பாட்டில் உள்ளது.

<u>சாலையோர வியாபாரிகளுக்கு வளர்ச்சித் திட்டம் (Support to Urban Street Vendors)</u>

இவ்வகைப்பாடுகள் மூலம் இத்திட்டம் நகர்ப்புறத்தில் உள்ள மக்களின் வாழ்க்கைதரம் மேம்படுத்திட , சாலையோர வியாபாரிகள் பற்றிய கணக்கெடுப்பு பேரூராட்சி காலத்திலேயே முடிக்கப்பட்டு 221 பயனாளிகளுக்கு அடையாள அட்டைகள் வழங்கப்பட்டுள்ளது. மேற்படி திட்டங்கள் யாவும் தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு திட்டத்தின் மூலம் சமுதாய அமைப்பாளர் திருமதி. எம்.செல்வி அவர்களின் ஒருங்கிணைப்பில் நகராட்சி ஆணையர் அவர்களின் தலைமையின் கீழ் இந்நகரில் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

ஆணையர்
பொன்னேரி நகராட்சி.

13/06/2023